**PSG COLLEGE OF ARTS & SCIENCE**
(AUTONOMOUS)

**BCom/ BBA/ BCA/ BVoc/ BSc & MSc(SS) DEGREE EXAMINATION MAY 2026**
(Fourth Semester)

Common to - **BCom/ BBA/ BCA/ BVoc / BSc & MSc (SS) PROGRAMMES**

**TAMIL – IV**

Time: Three Hours Maximum: 75 Marks

**பகுதி – I** **(5x1 = 5)**

**அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் விடையளிக்க.**

1. "நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும் செல்வம் அன்று" எனக் கூறும் ஆசிரியர் பெயரைக் குறிப்பிடுக?
2. ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தற்காகப் பாடப்பட்ட நூல் எது?
3. புனலாடல் பற்றி குறிப்பிடும் நூல் எது?
4. "கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை போல மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே" – யார் கூற்று?
5. "ஏறாண் முல்லை" – பொருள் தருக.

**பகுதி –II** **(8X5 = 40)**

**அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.**

6. அ. தேய்புரிப் பழங்கயிற்றினார் பாடற்கருத்தை விளக்குக.
(அல்லது)
ஆ. இளங்கீரந்தையார் பாடற்கருத்தை விளக்குக.

7. அ. "மகவுடை மந்தி போல அகன்உறத் தழீஇக் கேட்குநர் பெறினே" – கருத்துரைக்க.
(அல்லது)
ஆ. ஐங்குறுநூற்றில் செவிலித்தாய் உவந்த உள்ளத்துடன் நற்றாய்க்குக் கூறுவது யாது?

8. அ. நற்றாய் காக்கையிடம் வேண்டுவது யாது?
(அல்லது)
ஆ. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" – என்ற புறநானூற்றுப் பாடற்கருத்தை ஆராய்க.

9. அ. வெள்ளப்பெருக்கால் மக்கள் துன்புற்ற நிலையை பரிபாடல் வழி எடுத்துரைக்க.
(அல்லது)
ஆ. தினைப்புனம் காவல் காக்கும் தன்மையை குறிஞ்சிப்பாட்டின் வழி விளக்குக.

10. அ. "குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும் 'ஆள் அன்று' என்று வாளின் தப்பார்" என்ற புறநானூற்றுப் பாடலை விளக்குக.
(அல்லது)
ஆ. தமிழர்கள் பிறஉயிர்களின் உணர்வை மதித்தப்பாங்கை குறுங்குடி மருதனார் பாடல்வழி எடுத்துரைக்க.

11. அ. நற்றிணையில் பரத்தைக்கூற்றுப் பாடற்சிறப்பை எழுதுக.
(அல்லது)
ஆ. கலித்தொகை சுட்டும் மாலைநேர நிகழ்வுகளைக் காட்சிப்படுத்துக.

12. அ. ஐந்திணைக்குரிய முதற்பொருளை எழுதுக.
(அல்லது)
ஆ. புறத்திணைகள் குறித்து விளக்குக.

13. அ. உள்ளுறை குறித்து விளக்குக.
(அல்லது)
ஆ. எண்வகை மெய்ப்பாடுகளை எழுதுக.

**Cont…**

**பகுதி –III** **(3x10 = 30)**

**அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் தருக.**

14. அ. உணர்வினை மேலாண்மை செய்யும் விதத்தை இட்லியாக மாறுங்கள் எனும் நூலின் வழி தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ. உங்களுக்குள் இருக்கும் எந்த உணர்வினை சீர்செய்ய எண்ணுகிறீர்கள்? ஏன்? என்பதைப் பற்றி ஆராய்க.

15. அ. சாதனையாளர்களின் வாழ்வை இயக்கிய மந்திரச்சொற்களை கட்டுரைக்க.

(அல்லது)

ஆ. உங்களின் மனம்கவர்ந்த மந்திரச்சொற்கள் குறித்து கட்டுரைக்க.

16. அ. முச்சங்க வரலாறு குறித்து கட்டுரைக்க.

(அல்லது)

ஆ. சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் தமிழ் இலக்கிய உலகிற்கு வழங்கிய இலக்கிய வளங்களை விவரித்தெழுதுக.

Z-Z-Z END